அவர்கள் நிலமற்ற ஏழைகள். அவர்கள் 'மார்ஜினல் ஃபார்மர்ஸ், ஸ்மால் ஃபார்மர்ஸ்' என்கின்ற அளவுக்கு, அவர்களுடைய கடனை வஜா செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்திருந்தும் அது பற்றி ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறது அரசு. ஆகவே, அப்படிப்பட்ட ஏழை விவசாயிகளுக்கு வாடல் நோயால் மட்டுமல்லாது, இயற்கையினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கும் அரசாங்கம் சப்சிடி கொடுக்க அதாவது, நிதி உதவி தர முன் வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, வெற்றிலை கொடிக்கால்களைப் பொறுத்தவரை, அதனுடைய உரிமையாளர்கள் குத்தகைக்கு விடுகிறார்கள். அதனாலேதான் நாம் அரசாங்கத்தினுடைய உதவி நேரடியாக அவர்களுக்குச் சென்று சேருவதற்கு எப்படிப்பட்ட வாய்ப்பு இருக்கிறது என்பதை ஆராய வேண்டியிருக்கிறது. அந்த வகையான ஆய்வை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை அரசு நிச்சயம் மேற்கொள்ளும்.

தமிழகத்தில் கொக்கோ பயிரிடுதல்

*வினா எண் 70— திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தமிழகத்தில் கொக்கோ பயிரிடுவதற்கு ஏதேனும் ஊக்கம் தரப்படுகிறதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், சேலம், தர்மபுரி, வட ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் குறிப்பிட்ட மலைப்பகுதிகளில் செயல்படுத்தப்பட்டுவரும் மலைப்பகுதி வளர்ச்சித் திட்டங்களின் கீழும், கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய இரு மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் அயன மண்டல பழங்கள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழும் கொக்கோ பயிருக்கு இடுபொருட்கள் 50 சதவிகித மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன.

திரு. த. வேணுகோபால்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தமிழ் நாட்டில் கொக்கோ பயிரிடுவதற்கு சில மாவட்டங்களைக் குறிப்பிட்டு, அங்கு பயிரிடுவோரை ஊக்கப்படுத்துவதற்காக ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வளவு தொகை தரப்படுகிறது? மாவட்டவாரியாக ஊக்கத் தொகை தரப்படுகிறதா? அல்லது ஒட்டு மொத்தமாக ஊக்கத் தொகை தரப்படுகிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

[1982 பிப்ரவரி 6

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே தெரிவித்ததைப் போல், மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும், அயன மண்டல பழங்கள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழும், அதனை உள்ளடக்கி இருக்கிற மாவட்டங்களில் இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது உற்பத்தி செய்யப்படும் கொக்கோவை இன்று மார்க்கட்டிங் செய்வதற்குச் சிரமம் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக கன்னியாக்குமரி மாவட்டத்திலும் மதுரை மாவட்டத்திலும் உள்ள விவசாயிகள் மிகுந்த கஷ்டத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இவைகளை வாங்கி வந்த காட்பரிஸ் கம்பெனியினர் இப்போது இதை வாங்கத் தயாராக இல்லை. இப்படிப்பட்ட நிலையில் ஏற்பட்டுள்ள இந்தச் சிக்கலை நீக்கி அவர்கள் உற்பத்தி செய்யக் கூடிய பொருள்களை அவர்களே மார்க்கட்டிங் செய்யக்கூடிய ஏற்பாட்டினை அரசு இலாகா செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் ஏற்றுமதக் கொள்கை காரணமாக காட்பரிஸ் கம்பெனி 1979 ஆண்டுமுதல் இதைக் கொள் முதல் செய்வதை நிறுத்திவிட்டது. அதனாலே சில சிக்கல் ஏற்பட்டிருக்கின்றது. அந்தக் காரணத்தினால் அவர்களுக்கு ஏற்பட்ட சிரமத்தைப் போக்கி அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் கோக்கோ பயிரிடுபவர்கள் அனைவரையும் ஒன்றாக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் சேர்த்து, அதன் மூலம் கோக்கோ விற்பனை செய்வது என்ற திட்டத்தை அரசு ஏற்படுத்தி உள்ளது.

திரு. த. வேணுகோபால் : தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தில் கோக்கோ பரவலாகக் கிடைப்பதில்லை என்ற புகார்கள் இருக்கின்றன. இந்த கோக்கோ மருத்துவத் துறையில் மருந்து தயாரிப்பதற்குத் தேவையாக இருக்கின்ற காரணத்தினால் அவைகள் எளிதில் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவா அவர்களே, ஏராளமாக உற்பத்தியாவதால் காட்பரிஸ் கம்பனி கொள்முதல் செய்யவில்லை என்ற புகார் இருக்கிறது. ஆகவே அவைகள் எளிதில் கிடைக்கும் வாய்ப்பு ஏற்கனவே இருக்கின்றது.